# 18-04-2024 செய்தி

## வெள்ளத்தில் யு.ஏ.இ., தத்தளிக்கிறது; செயற்கை மழை திட்டத்தால் விபரீதம்

- மேற்காசியாவில் உள்ள வளைகுடா நாடுகளில் பெரும்பாலான பகுதிகள் பாலைவனமாக உள்ளன.
- எண்ணெய் வளம் அதிகம் உள்ள இந்த நாடுகளில், மழை என்பது மிகவும் அபூர்வமாகவே பெய்யும். அதிலும், குளிர்காலத்தில் ஒரு சில நாட்களில் பெய்யும்.
- யு.ஏ.இ., எனப்படும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், கத்தார், சவுதி அரேபியா ஆகிய நாடுகள், கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தின் வாயிலாக தண்ணீரை பெற்று வருகின்றன.
- நிலத்தடி நீரை தக்க வைக்க, அடிக்கடி இந்த நாடுகள், 'கிளைவுட் சீடிங்' எனப்படும் மேக விதைப்பு முறையை பயன்படுத்துகின்றன.
- இது இந்த பிராந்தியத்தில் ஒரு வழக்கமான நடைமுறை, இதன்படி, சில தினங்களுக்கு முன்பு, செயற்கை மழையை பெய்விக்கும் முயற்சியில் ஈடுபட்டது. ஏழு விமானங்கள் வாயிலாக ரசாயனங்கள் தெளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.
- யு.ஏ.இ.,யில் வழக்கமாக ஓர் ஆண்டில், 9.47 செ.மீ., அளவுக்கு மழை பெய்யும்.
- ஆனால், நேற்று முன்தினம் இரவு வரையிலான, 24 மணி நேரத்தில், 14.2 செ.மீ, அளவுக்கு மழை பெய்தது. குறிப்பாக துபாய் விமான நிலையம் ஒட்டிய பகுதியில் இந்த அளவுக்கு மழை பெய்தது.

## நடிகர் அமிதாப்பச்சன், ஏ.ஆர்.ரகுமானுக்கு விருது

- புகழ்பெற்ற பாடகி லதா மங்கேஷ்கர், 2022-ம் ஆண்டு தனது 92-வது வயதில் மரணம் அடைந்தார். அவரது நினைவாக லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது வழங்கப்படும் என்று குடும்பத்தினர் அறிவித்தனர்.
- தேசத்திற்கும், சமூகத்திற்கும் தன்னலமற்ற சேவை செய்பவர்களை கவுரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
- அதன்படி முதல் லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது, பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது. லதா மங்கேஷ்கரின் சகோதரி ஆஷா போன்ஸ்லேவும் இந்த விருதை பெற்றார்.
- இந்த வருடம் லதா தீனாநாத் மங்கேஷ்கர் விருது இந்தி நடிகர் அமிதாப்பச்சனுக்கு வழங்கப்படும் என்று குடும்பத்தினர் அறிவித்து உள்ளனர்.
- இதுபோல் இந்திய இசைக்கு செய்த சேவைகளுக்காக இசையமைப்பாளர் ஏ.ஆர் ரகுமானுக்கும் மங்கேஷ்கர் தீனா நாத் விருது அளிக்க இருப்பதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.
- விருதுகளை பின்னணி பாடகி ஆஷா போன்ஸ்லே வழங்குவார் என்று அறிவித்துள்ளனர்.

## டைம் வெளியிட்டுள்ள 100 செல்வாக்கு மிக்க நபர்களின் பட்டியலில் சாக்ஷி

- டைம் இதழின் 2024 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களின் பட்டியலில் சாக்ஷி மாலிக் இடம்பெற்றுள்ளார்.
- மல்யுத்தத்தில் இந்தியாவின் ஒரே மகளிர் ஒலிம்பிக் பதக்கம் வென்ற சாக்ஷி, முன்னாள் WFI தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங்கால் பெண்கள் மல்யுத்த வீரர்களை துன்புறுத்தியதாகக் கூறப்படும் இடைவிடாத போராட்டத்திற்காக கௌரவிக்கப்பட்டார்.

SURESH'